IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.234/2021
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 4.30 p.m.

பி.வா.சா. 2சாட்சி கோசலை க.பெ.தவமணி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 17.11.2025 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1.நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் காங்கேயநத்தம் ஆகும். எனது கணவர் எங்கு குடியிருக்கிறார் என்றால் திருப்பூரில் எனது மகனுடன் குடியிருந்து வருகிறார். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3மகன் மற்றும் 1 மகள் ஆவார்கள். எனது கணவருக்கும், எனக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் கடந்த 15 ஆண்டுகளாக பேச்சு வார்த்தை இல்லை.

2. அசல் வழக்கு தாக்கல் செய்த காலத்திலும் எனது கணவர் திருப்பூரில் இருந்தார் என்றால் சரியல்ல. நான் சாட்சியம் அளிக்க வந்துள்ள விபரம் எனது கணவருக்கு தெரியாது என்றால் நான் அவரிடம் தொலைபேசியில் கூறவில்லை. வழக்கு விபரம் தெரியுமா என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3. 2ம்பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை பற்றி தெரியுமா என்றால் தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு

தெரியுமா என்றால் தெரியும். எனது மாமனார் தவசித்தேவரின் தந்தை பெயர் உடையாத்தேவர் என்றால் சரிதான். மேற்படி உடையாத்தேவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் தவசித்தேவர், அய்யர்தேவர், மொக்கத்தேவர் ஆகியோர்கள் ஆவார்கள்.

4. உடையாத்தேவருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துதான் தவசித்தேவருக்கு பாகமாக கிடைத்துள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகமானது வாய்மொழியாக ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது கணவரின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் யாரும் இல்லை. எனது மாமனாருக்கு இரண்டுதாரம் ஆகும்.

5. எனது மாமனாருக்கு இரண்டுதாரம் பற்றிய எனது கணவரின் எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. திருமணத்திற்கு முன்பு எனது கணவர் எனக்கு உறவினர் அல்ல என்றால் சரிதான். முத்துமணி என்பவர் யார் என்றால் 2ம்பிரதிவாதியின் உடன்பிறந்தவர் ஆவார். முத்துமணிக்கு எத்தனை ஆண்டுகளாக கண்தெரியாது என்றால் முத்துமணியின் திருமணத்திற்கு முன்பாக சுமார் 6–7ஆண்டுகளாக கண்தெரியாது.

6. முத்தையா தனது உடன்பிறந்த அக்காமகள் என்ற முறையில் முத்துமணியை திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். முத்தையா, முத்துமணிக்கு பிறந்த பெண்பிள்ளைதான் வழக்கின் 4ம்பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி 4ம்பிரதிவாதிக்கு

2பெண்பிள்ளைகள் என்றால் 1மகனும், 1மகளும் ஆவார்கள். மேற்படி 2பிள்ளைகளுக்கும் கண்தெரியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. உடையாத்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அவரது காலத்திற்கு பிறகு தவசித்தேவர் அனுபவம் செய்தார் என்றால் சரிதான். தவசித்தேவருக்கு பிறகு அவரது வாரிசுகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

( வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

முடிவடையும் நேரம்:4.50 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.17 17:38:22 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.